## பாடம் 1 - திராவிட மொழிக்குடும்பம்

**1)** முதலில் தம் எண்ணங்களை எதன் மூலமாக பிறருக்குத் தெரிவிக்க மனிதன் முற்பட்டான்?

A) மெய்ப்பாடுகள்
B) ஒலிகள், சைகைகள்
C) ஓவியங்கள்
D) மேற்கண்ட அனைத்தும்

- தனக்குத் தோன்றிய கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்துவதற்கு மனிதன் கண்டுபிடித்த கருவியே ______ (மொழி)

**2)** மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் முதலியவற்றின் மூலமாக மனிதனால் பின்வரும் எதை மட்டுமே ஓரளவு உணர்த்தமுடிந்தது?

A) பருப்பொருட்கள்
B) நுண்பொருள்கள்
C) A & B
D) மேற்கண்ட எதுவுமில்லை

- நுண்பொருட்களை உணர்த்த இயலவில்லை

**3)** வேறுபட்ட ஒலிப்பு முறைகள் தான் பல மொழிகள் உருவாக காரணமாக அமைந்தன. வேறுபட்ட ஒலிப்பு முறைகள் தோன்றக் காரணமானவை எவை?

A) இட அமைப்பும், உடல் அமைப்பும்
B) சுற்றியிருந்த மனிதர்களும், இயற்கை அமைப்பும்
C) இட அமைப்பும், இயற்கை அமைப்பும்
D) மனிதர்களின் உடல் அமைப்பும், சுற்றியிருந்த மனிதர்களும்

**4)** உலகின் மொழிகளெல்லாம் எதன் அடிப்படையில் மொழிக்குடும்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளன?

A) மொழிகளின் பிறப்பு
B) மொழிகளுக்கிடையேயான தொடர்பு
C) மொழிகளின் அமைப்பு & உறவு
D) மேற்கண்ட அனைத்தும்

**5)** இந்திய மொழிகள் எத்தனை மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன?

A) ஐந்து
B) மூன்று
C) நான்கு
D) ஆறு

- இந்தியாவில் எத்தனைக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன? 1300

**6)** பின்வருவனவற்றுள் இந்திய மொழிக்குடும்பங்களில் சேராதது எது?

A) இந்தோ - ஆசிய மொழிகள்
B) ஆப்பிரிக்க ஆசிய மொழிகள்
C) ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
D) சீன - திபெத்திய மொழிகள்

- மற்றுமொரு மொழிக்குடும்பம்: திராவிட மொழிகள்

**7)** இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என்று அழைத்தவர் யார்?

A) தேவநேயப்பாவாணர்
B) மறைமலையடிகள்
C) கால்டுவெல்
D) ச. அகத்தியலிங்கம்

**8)** மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகத்தை அறிஞர்கள் எந்த நாகரிகமாகக் கருதுகின்றனர்?

A) ஆப்பிரிக்க நாகரிகம்
B) திராவிட நாகரிகம்
C) ஆரிய நாகரிகம்
D) நாகர்கள் நாகரிகம்

- இந்திய நாகரிகம் பழமையானது என்பது என்பது எந்த அகழ்வாய்விற்குப் பிறகு உறுதிசெய்யப்பட்டது? மொஹஞ்சதாரோ, ஹரப்பா

**1)D 2)A 3)C 4)D 5)C 6)B 7)D 8)B**

ETW ACADEMY

**9)** திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர்?

A) ஹீராஸ் பாதிரியார் B) மாக்ஸ் முல்லர் C) குமரிலப்பட்டர் D) கால்டுவெல்

- "திராவிடா" என்னும் சொல் எதிலிருந்து பிறந்ததாக மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்? தமிழ்

**10)** தமிழ் தமிழா என்றும், தமிழா தமிலா என்றும், தமிலா, டிரமிலா என்றும், டிரமிலா த்ராவிடா என்றும், த்ராவிடா திராவிடா என்றும் மாற்றமடைந்து வந்ததாகச் சொன்னவர் யார்?

A) ஹீராஸ் பாதிரியார் B) மு. வரதராசனார் C) ச. அகத்தியலிங்கம் D) கால்டுவெல்

**11)** எதுவரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அதிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர்?

A) 17ம் நூற்றாண்டின் இறுதி வரை B) 18ம் நூற்றாண்டின் துவக்கம் வரை

C) 18ம் நூற்றாண்டின் இறுதி வரை D) 19ம் நூற்றாண்டின் துவக்கம் வரை

**12)** மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டவர் யார்?

A) வில்லியம் ஜோன்ஸ் B) பேராசியர் பாப்

C) பேராசியர் ராஸ்க் D) பிரான்சிஸ் எல்லீஸ்

- 1816ஆம் ஆண்டில் மொழி சார்ந்த பல ஆய்வுகளை மேற்கொண்டவர்கள்: பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம்

**13)** தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஆராய்ந்து அவை தனி மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என முதன்முதலில் தம் கருத்தை முன்வத்தவர் யார்?

A) ஜி.யு.போப் B) இராபர்ட் தி நோபிலி

C) பிரான்சிஸ் எல்லீஸ் D) வீரமாமுனிவர்

**14)** தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் என பெயரிட்டவர் யார்?

A) மாக்ஸ் முல்லர் B) இராபர்ட் தி நோபிலி C) பிரான்சிஸ் எல்லீஸ் D) கால்டுவெல்

**15)** மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகளை ஆய்வு செய்து அவற்றை இணைத்து "தமிழியன்" எனப்பெயரிட்டதோடு இவை ஆரிய மொழிகளிலிருன்ப்து வேறுபட்டவை என்றவர் யார்?

A) ஹோக்கன் B) மார்க்ஸ் முல்லர் C) கால்டுவெல் D) எல்லீஸ்

- ஆரிய மொழிகளிலிருன்ப்து வேறுபட்டவை என்ற கருத்தைக் கொண்டிருந்த மற்றொருவர்: மாக்ஸ் முல்லர்

**16)** 1856 இல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை இயற்றியவர்?

A) வீரமாமுனிவர் B) மாக்ஸ் முல்லர்

C) கால்டுவெல் D) ஹீராஸ் பாதிரியார்

**17)** கால்டுவெல் கூற்றுப்படி திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து ........................

A) வந்தவை B) வேறுபட்டவை C) சிதைந்தவை D) மாற்றமடைந்தவை

கால்வெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களித்தவர்கள்:

ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சிசுந்தரம்

**9)C 10)A 11)B 12)A 13)C 14)C 15)A 16)C 17)B**

**18)** திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் ................. வகைப்படுத்தப்பட்டுள்ளது.

A) நான்கு B) ஐந்து C) மூன்று D) பத்து

**19)** திராவிட மொழிக்குடும்ப வகைகளில் சேராதது எது?

A) தென் திராவிட மொழிகள் B) நடுத் திராவிட மொழிகள்
C) வட திராவிட மொழிகள் D) பொதுத் திராவிட மொழிகள்

**20)** பின்வரும் எது தென் திராவிட மொழி அல்ல?

A) கொடகு B) தோடா C) கோண்டி D) கொரகா

**21)** மால்தோ, குரூக், பிராகுய் (பிராகுயி) ஆகியவை?

A) தென் திராவிட மொழிகள் B) நடுத் திராவிட மொழிகள்
C) வட திராவிட மொழிகள் D) மேற்கத்திய மொழிகள்

**22)** நடுத்திராவிட மொழி அல்லாதது எது?

A) மண்டா B) பெங்கோ C) நாய்க்கி D) கோத்தா

**23)** பின்வரும் எது நடுத்திராவிட மொழி ஆகும்?

A) தெலுங்கு B) மலையாளம்
C) கன்னடம் D) மேற்கண்ட அனைத்தும்

<u>நடுத்திராவிட மொழிகள்</u>: தெலுங்கு, கூயி, கூவி (குவி), கோண்டா, கோலாமி (கொலாமி), நாய்க்கி, பெங்கோ, மண்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா

<u>தென்திராவிட மொழிகள்:</u> தமிழ், மலையாளம், கன்னடம், குடகு (கொடகு), துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா

**24)** திராவிட மொழிகள் மொத்தம் எத்தனை?

A) 24 B) 28 C) 27 D) 32

**25)** அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகளில் சேராதது எது?

A) எருகலா B) தங்கா C) குடகு D) சோழிகா

<u>அண்மையில் கண்டறியப்பட்ட நான்கு திராவிட மொழிகள்:</u> எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா

**26)** தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக் குடும்பத்திற்கு உரியமொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி; தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் - என்றவர் யார்?

A) விண்டர் நீட்ஸ் B) மாக்ஸ் முல்லர் C) ஹீராஸ் பாதிரியார் D) கால்டுவெல்

**27)** திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் ஒன்று போலவே உள்ளன. அடிச்சொல்லையும் திராவிட மொழியையும் பொருத்துக.

(i) கண்ணு - 1. தோடா
(ii) கன்னு - 2. மலையாளம், கன்னடம்
(iii) ∴கன் - 3. தெலுங்கு, குடகு
(iv) கொண் - 4. குரூக்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**18)C 19)D 20)C 21)C 22)D 23)A 24)B 25)C 26)D 27)A**

எண்ணுப்பெயர்களும் ஒன்றுபோலவே அமைந்துள்ளன

- மூன்று - தமிழ்
- மூடு - தெலுங்கு
- மூஜி - துளு
- மூணு - மலையாளம்
- மூரு - கன்னடம்

**28)** திராவிட மொழிகளில் ஒரு பொருளை வேறுபடுத்துவதற்கு துணை செய்வது எது?

A) குறில், நெடில் B) வல்லினம் C) மெய்யெழுத்துகள் D) உயிர் எழுத்துகள்

**29)** பின்வரும் எம்மொழியில் பொருள்களின் தன்மையை ஒட்டி பால் பாகுபாடு அமைந்துள்ளது?

A) தமிழ் மொழியில் மட்டும் B) வடமொழியில் C) திராவிட மொழிகளில் D) ஆங்கிலத்தில்

- வடமொழியில் அவ்வாறு இல்லை
- திராவிடமொழிகளில் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருட்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன.

**30)** திராவிடமொழிகளில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. வேறு ஒரு மொழியிலும் இத்தன்மை காணப்படுகிறது. அந்த மொழி எது?

A) ஜெர்மானிய மொழி B) சீன மொழி
C) ஆங்கில மொழி D) லத்தீன் மொழி

**31)** பொருந்தாதது எது?

A) வாய் - ஆண்பால் B) கண் - பெண்பால்
C) மூக்கு - பெண்பால் D) மேற்கண்ட எதுவுமில்லை

- கண் - பொதுப்பால்

**32)** திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு எதில் காணப்படுகிறது?

A) அஃறிணை பன்மையில் B) உயர்திணை பன்மையில்
C) அஃறிணை ஒருமையில் D) உயர்திணை ஒருமையில்

- அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.
- தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் - மந்தி; களிறு - பிடி)

**33)** பின்வரும் எம்மொழியில் வினைச்சொல்லானது காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை?

A) கன்னடம் B) ஆங்கிலம் C) தமிழ் D) தெலுங்கு

- திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டை தெளிவாகக் காட்டுகின்றன

**34)** இயல்புக்கு மாறாக எந்த திராவிட மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பால் காட்டும் விகுதிகள் இல்லை?

A) தெலுங்கு B) தமிழ் C) துளு D) மலையாளம்

- மலையாளத்தில் தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும்.

**28)A 29)C 30)A 31)B 32)D 33)B 34)D**

**35)** இலக்கிய நூல்களைப் பொருத்துக:

(i) தமிழ் - 1. கவிராஜ மார்கம்

(ii) தெலுங்கு - 2. ராம சரிதம்

(iii) மலையாளம் - 3. பாரதம்

(iv) கன்னடம் - 4. சங்க இலக்கியம்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**36)** இலக்கண நூல்களைப் பொருத்துக:

(i) தமிழ் - 1. கவிராஜ மார்கம்

(ii) கன்னடம் - 2. ஆந்திர பாஷா பூஷணம்

(iii) தெலுங்கு - 3. லீலா திலகம்

(iv) மலையாளம் - 4. தொல்காப்பியம்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**37)** இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) மு.வரதராசனார்

B) திரு.வி.க

C) செ.வை.சண்முகம்

D) மறைமலையடிகள்

| மொழி | இலக்கியம் | காலம் | இலக்கணம் | காலம் | சான்று |
|---|---|---|---|---|---|
| தமிழ் | சங்க இலக்கியம் | பொ.ஆ.மு. 5 – பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு அளவில் | தொல்காப்பியம் | பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டு அளவில் | தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ.) சாகித்திய அகாதெமி |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டு | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டு | இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் – செ. வை. சண்முகம் |
| தெலுங்கு | பாரதம் | பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டு | ஆந்திர பாஷா பூஷணம் | பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டு | |
| மலையாளம் | ராம சரிதம் | பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டு | லீலா திலகம் | பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டு | மலையாள இலக்கிய வரலாறு – சாகித்திய அகாதெமி |

**35)D 36)C 37)C**

ETW ACADEMY

### திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | --------- |
| நூறு | நூறு | நூரு | நூரு | நூது | --------- |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | நின் |
| இரண்டு | ஈர்ரெண்டு | ஈர்ரெண்டு | எரடு | ரட்டு | ------ |
| நான்கு | நால், நாங்கு | நாலுகு | நாலு | நாலு | ------ |
| ஐந்து | அஞ்சு | ஐது | ஐது | ஐனு | ------- |

- தமிழ் - தொன்மையும் இலக்கிய வளமும் உடைய திராவிடமொழி
- பேசப்படும் நாடுகள்: இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு, தென்ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா

**38)** ஏனைய திராப்விட மொழிகளை விடவும் தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி எது?

A) தமிழ் B) தெலுங்கு C) மலையாளம் D) கன்னடம்

**39)** திராவிட மொழிகளுள், பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி எது?

A) தமிழ் B) தெலுங்கு C) மலையாளம் D) கன்னடம்

**40)** இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை எந்த மொழியிலேயே அமைந்துள்ளன?

A) இந்தி B) தெலுங்கு C) சமஸ்கிருதம் D) தமிழ்

**41)** பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்விற்கு பெருந்துணையாக அமைந்துள்ள மொழி எது?

A) தமிழ் B) தெலுங்கு C) மலையாளம் D) கன்னடம்

- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழி: தமிழ்
- இலங்கை & மொரிஷியஸ் உள்ளிட்ட பலநாடுகளின் பணத்தாள்களில் தமிழ் இடம்பெற்றுள்ளது

**42)** தமிழ்மொழி

1. ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்களைக் கொண்டுள்ள, சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி
2. மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றை பேணிக்காத்துவரும் மொழி
3. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் பண்பு கொண்ட மொழி

A) 1 & 2 மட்டும் B) 2 & 3 மட்டும்
C) 1 & 3 மட்டும் D) மேற்கண்ட அனைத்தும்

### பாடம் 2 - தமிழோவியம்

**43)** காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக் / காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - என்னும் கவிதை வரிகள் யாருடையவை?

A) இரா.பி.சேது B) மு. மேத்தா
C) ஈரோடு தமிழன்பன் D) நா. பார்த்தசாரதி

**38)A 39)A 40)D 41)A 42)D 43)C**

**44)** நிகரில்லாப் பூவனமாக விளங்குவது என ஈரோடு தமிழன்பன் எதனைக் குறிப்பிடுகிறார்?

A) காப்பியங்கள் B) கவிதைகள்

C) கட்டுரைகள் D) நாடகங்கள்

**45)** மானிட மேன்மையைச் சாதித்திட பயன்படுவதாக தமிழன்பன் கூறும் நூல்?

A) நாலடியார் B) இன்னா நாற்பது

C) திருக்குறள் D) ஆசாரக்கோவை

**46)** எத்தனை எத்தனை, விட்டு விட்டு என்பனவற்றின் இலக்கணக்குறிப்பு தருக.

A) இரட்டைக்கிளவி B) எண்ணும்மை

C) அடுக்குத்தொடர் D) உம்மைத்தொகை

**47)** ஏந்தி - இலக்கணக்குறிப்பு தருக.

A) பெயரெச்சம் B) பண்புத்தொகை

C) உம்மைத்தொகை D) வினையெச்சம்

**48)** பின்வரும் எது "முற்றும்மை"?

A) காலமும் B) அவனும் அவளும்

C) அண்ணன் தம்பி D) படித்த பெண்

**49)** தமிழோவியம் என்னும் நூலை இயற்றியவர்?

A) இரா.பி.சேது B) ஈரோடு தமிழன்பன் C) பெருஞ்சித்திரனார் D) தமிழழகனார்

**50)** பின்வரும் தொடர்களில் ஈரோடு தமிழன்பனோடு தொடர்பில்லாத தொடரைத் தேர்ந்தெடு.

A) தமிழோவியம் என்ற நூலின் முன்னுரையில், "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவையில்லை. பாடலும் அப்படித்தான்" என்றார் இவர்

B) புதுக்கவிதை, சிறுகதை, ஹைக்கூ, சென்ட்ரியு, லிமரைக்கூ முதலான வடிவங்களைக் கையாண்டவர்.

C) வெள்ளைப்பறவை என்னும் கவிதை நூலுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

D) இவருடைய படைப்புகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன.

**51)** ஈரோடு தமிழன்பனின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற கவிதை நூல் எது?

A) கையொப்பம் B) ஆலாபனை

C) ஒரு கிராமத்து நதி D) வணக்கம் வள்ளுவ

- ஆண்டு: 2004

**52)** ஈரோடு தமிழன்பனின் எந்த நூலுக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது?

A) தமிழின்பன் கவிதைகள் B) வணக்கம் வள்ளுவ

C) நெஞ்சின் நிழல் D) விடியல் விழுதுகள்

**53)** இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் - என்று குறிப்பிட்ட நிகண்டு?

A) திவாகர நிகண்டு B) பிங்கல நிகண்டு

C) சூளாமணி நிகண்டு D) உரிச்சொல் நிகண்டு

**44)A 45)C 46)C 47)D 48)A 49)B 50)C 51)D 52)A 53)B**

ETW ACADEMY

**54)** யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் - என்றவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்
C) கவிமணி D) நாமக்கல் கவிஞர்

**55)** உலகத் தாய்மொழி நாள் எது?

A) ஜூலை 15 B) நவம்பர் 11 C) பிப்ரவரி 21 D) ஜனவரி 24

பாடம் 3 - தமிழ்விடு தூது

**56)** தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான / முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள் / உண்ணப் படும்தேனே - என்னும் பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?

A) பெரியபுராணம் B) தமிழ்விடுதூது
C) பராபரக்கண்ணி D) முத்தொள்ளாயிரம்

**57)** தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகையை எவ்வாறு அழைப்பர்?

A) அந்தாதி B) சிந்து
C) கண்ணி D) மேற்கண்ட அனைத்தும்

- இரண்டு கண்களைப்போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்கு கண்ணி என்று பெயர்.

**58)** பின்வருவனவற்றுள் சிற்றிலக்கிய வகையில் சேராதது எது?

A) குறம் B) பள்ளு C) உலா D) மூதுரை

- தமிழ்விடுதூது கூறும் மூன்றினங்கள்: துறை, தாழிசை, விருத்தம்
- தமிழ்விடுதூது கூறும் முக்குணங்கள்: சமத்துவம், அமைதி, மேன்மை

**59)** சிந்தா மணி, சிதறாத மணி என்னும் இருபொருளையும் குறிப்பது எது?

A) நால்வர் நான்மணிமாலை B) சீவக சிந்தாமணி
C) திருவிரட்டை மணிமாலை D) மணிமேகலை

**60)** சிந்து என்பது ஒரு வகை ..............................

A) இசைப்பாடல் B) நாடகம் C) கவிதை D) சிறுகதை

- இராசசம் - போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்
- தாமசம் - சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்
- பத்துக்குணம் - செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி
- வண்ணம்நூறு - குறில், அகவல், தூங்கிசை இடைமெல்லிசை வண்ணம் முதலாக நூறு
- மெய்ப்பாடு - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை
- வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை (மனிதரால் உருவாக்கப்பட்டவை
- நவரசம்: வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை
- ஊனரசம்: குறையுடைய சுவை

**61)** தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்பு எண்ணிக்கை யாது?

A) எட்டு B) பத்து C) ஒன்பது D) ஐந்து

**54)A 55)C 56)B 57)C 58)D 59)B 60)A 61)A**

ETW ACADEMY

- அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இயைபு

**62)** சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களைப் பெற்றவர்கள் என தமிழ்விடுதூது குறிப்பது எவரை?

A) அசுரர்கள் B) தேவர்கள் C) புலவர்கள் D) அமைச்சர்கள்

**63)** நாவிற்கு விருந்தளிக்கும் சுவை எத்தனை?

A) ஒன்பது B) எட்டு C) ஆறு D) நான்கு

**64)** சிந்தாமணி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வேற்றுமைத்தொகை B) வினைத்தொகை

C) பெயரெச்சம் D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**65)** நா - என்ற ஓரெழுத்து ஒருமொழியின் பொருள் என்ன?

A) நாவு B) அன்பு C) வருந்து D) வறுமை

**66)** பொருத்துக.

(i) முத்திக்கனி - 1. உருவகம்

(ii) தெள்ளமுது - 2. பண்புத்தொகை

(iii) செவிகள் உணவாக - 3. நான்காம் வேற்றுமைத்தொகை

(iv) தேன் தமிழ் - 4. உவமைத்தொகை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**67)** தூது என்ற சிற்றிலக்கியத்தை எவ்வாறு அழைப்பர்?

1. வாயில் இலக்கியம்

2. சந்து இலக்கியம்

3. கதவு இலக்கியம்

A) 1, 2 & 3 B) 1 & 2 C) 1 & 3 D) 2 & 3

<u>தூது:</u>

- தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக "மாலையை வாங்கிவருமாறு" ஏதோ ஒன்றை தூது விடுவதாக இயற்றப்படும் சிற்றிலக்கிய வகை

**68)** தூதுப்பொருட்கள் எத்தனை?

A) 8 B) 10 C) 12 D) 6

- அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாயப்புள், தோழி, குயில், மனம், தென்றல், வண்டு

**69)** தூது இயற்றப்படும் பா வகை யாது?

A) வெண்பா B) ஆசிரியப்பா

C) கலி வெண்பா D) வஞ்சிப்பா

**62)B 63)C 64)D 65)A 66)B 67)B 68)B 69)C**

ETW ACADEMY

**70)** தமிழ்விடு தூதின் பாட்டுடைத்தலைவன் யார்?

A) தில்லை நடராசர் B) தஞ்சை பெருவுடையார்

C) திருவண்ணாமலை அண்ணாமலையார் D) மதுரை சொக்கநாதர்

**71)** தமிழ்விடுதூது எத்தனை கண்ணிகளை உடையது?

A) 255 B) 31 C) 268 D) 732

**72)** தமிழ்விடு தூதை 1930இல் முதன்முதலில் பதிப்பித்தவர் யார்?

A) ம.பொ.சிவஞானம் B) மீனாட்சி சுந்தரனார் C) சி.வை.தாமோதரனார் D) உ.வே.சாமிநாதர்

**73)** தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?

A) பலபட்டை சொக்கநாதப் புலவர் B) உமாபதி சிவாச்சாரியார்

C) கோயமுத்தூர் கந்தசாமி முதலியார் D) அறியப்படவில்லை

**74)** "காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும்" எனக் காப்பியங்களை வரிசைப்படுத்தும் பாடலை இயற்றியவர் யார்?

A) பாரதியார் B) சுத்தானந்த பாரதியார் C) பாரதிதாசன் D) கண்ணதாசன்

காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"

-கவியோகி சுத்தானந்த பாரதியார்

## பாடம் 4 - வளரும் செல்வம்

### கலைச்சொற்கள்.

- மடிக்கணினி - Laptop
- மென்பொருள் – software
- செதுக்கி – crop
- உலவி - browser
- ஏவி அல்லது சுட்டி - cursor
- இணையவெளி – cyberspace
- வையக விரிவு வலை வழங்கி – server
- உறை - Folder

**75)** பின்வருவனவற்றுள் எது அளவுப்பெயர் இல்லை?

A) முந்திரி, காணி, முக்காணி B) ஒருமா, இருமா, மூன்றுமா

C) கண், அகக்கண், காண் D) கால், முக்கால், வீசம்

**76)** பெயரையும் எண் அளவையும் பொருத்துக:

(i) முந்திரி - 1) 1/20

(ii) காணி - 2) 1/5

(iii) மாகாணி (வீசம்) - 3) 1/320

(iv) ஒருமா - 4) 1/80

(v) நாலுமா - 5) 1/16

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| D) | 3 | 5 | 4 | 1 | 2 |

**70)D 71)C 72)D 73)D 74)B 75)C 76)B**

| பெயர் | எண் அளவு |
|---|---|
| முந்திரி | 1/320 |
| அரைக்காணி | 1/160 |
| அரைக்காணி முந்திரி | 3/320 |
| காணி | 1/80 |
| கால் வீசம் | 1/64 |
| அரைமா | 1/40 |
| அரை வீசம் | 1/32 |
| முக்காணி | 3/80 |

| | |
|---|---|
| முக்கால் வீசம் | 3/64 |
| ஒருமா | 1/20 |
| மாகாணி (வீசம்) | 1/16 |
| இருமா | 1/10 |
| அரைக்கால் | 1/8 |
| மூன்றுமா | 3/20 |
| மூன்று வீசம் | 3/16 |
| நாலுமா | 1/5 |

**77)** வேற்றுமொழியில் இருக்கும் கலைச்சொற்களை நம் மொழியில் எவ்வாறு உருவாக்கலாம்?

A) ஒலிபெயர்ப்புச் செய்து B) மொழிபெயர்ப்புச் செய்து

C) A & B D) திரிபு செய்து

**78)** கலைச்சொற்களை அப்படியே பயன்படுத்தாமல் அவற்றை ஏன் நம் மொழிக்கு மாற்ற வேண்டும்?

A) வேற்று மொழிச்சொற்களை எளிதாக நாம் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது

B) சொற்கள் அந்தந்த மொழி பேசுவோரின் பேச்சுறுப்புகளுக்கு ஏற்ப அமைந்தவை. அவற்றை நாம் பேசும்போது ஒலித்திரிபு ஏற்பட்டுப் பொருள்மயக்கம் உண்டாகும்.

C) ஒரு காலகட்டத்தில் தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையைவிட வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும்.

D) மேற்கண்ட அனைத்தும்

**79)** பலவகையான கடற்கலன்களில் சேராதது?

A) வங்கம் B) கலம் C) பரிசல் D) தோணி

- மற்றொரு கடற்கலன்: கலம்
- தமிழ்ச்சொல்லாகிய நாவாய் என்பதே ஆங்கிலத்தில் நேவி என ஆகியுள்ளது.

**80)** கடல் சார்ந்த சொற்களில் தமிழ்ச்சொற்களைப் பெற்றிருக்கும் செவ்வியல் மொழி யாது?

A) கிரேக்கம் B) இலத்தீன் C) சமஸ்கிருதம் D) மலையாளம்

எறிதிரை {Ἐρύθραν [எறுதிரான்]}, கலன் {Γλαύκου [கலயுகோய்]}, நீர் {Νηρῆος [ நீரியோஸ்]}, Νηρέα [நீரிய], நாவாய் {Ναύ [நாயு]}, தோணி {Θῶνις [தோணீஸ்]}

**81)** "பா" என்ற சொல் கிரேக்க மொழியின் தொன்மையான காப்பியமாகிய _______ இல் பாய்யியோனா (παιήονα) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

A) ஒடிசி B) சர்கிள் C) இலியட் D) மித்தாலஜி

- அப்போலோ என்னும் கடவுளுக்குப் பாடப்படுவது 'பா' எனக் கிரேக்கத்தில் குறிக்கப்படுகிறது.

**82)** வெண்பாவிற்கு உரிய ஓசை எது?

A) அகவலோசை B) செப்பலோசை C) துள்ளலோசை D) தூங்கலோசை

**83)** வெண்பா வடிவப் பாடல்கள் கிரேக்கத்தில் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) நாவெல்லா B) இனிகியா C) பாய்யியோனா D) சாப்போ

**77)C 78)D 79)C 80)A 81)C 82)B 83)D**

ETW ACADEMY

84) சாப்போ என்ற சொல் கிரேக்கத்திலிருந்து இலத்தீன் மொழிக்கு வந்து பின் ஆங்கிலத்திற்கு வந்தது. சாப்போ (வெண்பா) என்ற சொல் ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பாய்யியோனா B) நாவெல்லா C) சேப்பிக் ஸ்டேன்சா D) இளிகியா

85) பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா (ελεγεία) என எந்த மொழியில் அழைக்கப்படுகின்றன?

A) கிரேக்கம் B) லத்தீன் C) ஆங்கிலம் D) பிரெஞ்சு

- தமிழ்நாடு பற்றியும், கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடலில் எவ்வழியாக வரவேண்டும் என்பது பற்றியும் குறிப்புகளைக் கொண்ட கிரேக்க நூல் எது? எரித்திரியன் ஆ.ஃப் தெ பெரிப்ளஸ்

பொருள்: கடலைச் சார்ந்த பெரிய புலம்

## பாடம் 5 - தொடர் இலக்கணம்

86) ஒரு சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமையும் பெயர்ச்சொல்லை எவ்வாறு அழைப்பர்?

A) எழுவாய் B) பயனிலை

C) வினையாலனையும் பெயர் D) செயப்படுபொருள்

- எ.கா: எட்வர்டு வந்தான் என்ற தொடரில் எட்வர்டு என்பது எழுவாய்

87) ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தை எவ்வாறு சுட்டுவர்?

A) செயப்படுபொருள் B) பயனிலை

C) வினையாலனையும் பெயர் D) எழுவாய்

- எ.கா: கனகாம்பரம் பூத்தது என்ற தொடரில், "பூத்தது" என்பது வினைச்சொல். இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும்.

88) எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்படும் பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) எழுவாய் B) பயனிலை

C) வினையெச்சம் D) செயப்படுபொருள்

எ.கா: மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்

இங்கு,

- மீனா - பெயர்ச்சொல்
- கனகாம்பரத்தை - செயப்படுபொருள்
- சூடினாள் - பயனிலை.

89) ஒரு தொடரில் எழுவாயும், செயப்படுபொருளும் பெயர்ச்சொல்லாக இருக்கும். பயனிலை _____ ஆக இருக்கும்.

A) வினைமுற்று B) பெயரெச்சம் C) வினையெச்சம் D) முற்றும்மை

- ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று
- ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயமும் இல்லை.
- செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.

84)C 85)A 86)A 87)B 88)D 89)A

ETW ACADEMY

**90)** படித்தாய் என்பது?

A) தோன்றா எழுவாய் B) வினைப் பயனிலை

C) பெயர்ப் பயனிலை D) வினாப் பயனிலை

- நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. எனவே இது தோன்றா எழுவாய்

**91)** பொருத்துக.

(i) வந்தாய் - 1) வினாப் பயனிலை

(ii) நான் வந்தேன் - 2) தோன்றா எழுவாய்

(iii) சொன்னவள் கலா - 3) வினைப் பயனிலை

(iv) விளையாடுபவன் யார்? - 4) பெயர்ப் பயனிலை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

- வினைமுற்று (வந்தேன்) பயனிலையாக வந்தால் அது வினைப் பயனிலை
- பெயர்ச்சொல் (கலா) பயனிலையாக வந்தால் அது பெயர்ப் பயனிலை
- வினாச்சொல் (யார்?) பயனிலையாக வந்தால் அது வினாப் பயனிலை

**92)** பொருத்துக

(i) நல்ல நூல் படித்தேன் - 1. பெயரடை

(ii) மகிழ்நன் மெல்ல வந்தான் - 2. வினையடை

(iii) பந்து உருண்டது - 3. தன்வினை

(iv) பந்தை உருட்ட வைத்தான் - 4. பிறவினை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

- எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.
- எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்
- பிற வினைகள், வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

**93)** கீழ்காண்பனவற்றுள் தன்வினை வாக்கியம் எது?

A) அவனை திருந்தச் செய்தான் B) தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்

C) பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார் D) அவர்கள் நன்றாகப் படித்தனர்

**94)** செய்பவரை முதன்மைப்படுத்தும் வினையை எவ்வாறு அழைப்பர்?

A) தன்வினை B) பிறவினை

C) செய்வினை D) செயப்பாட்டு வினை

**90)A 91)A 92)B 93)D 94)C**

ETW ACADEMY

**95)** செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினையை எவ்வாறு அழைப்பர்?

A) தன்வினை
B) பிறவினை
C) செய்வினை
D) செயப்பாட்டு வினை

**96)** கீழ்க்காண்பவற்றில் எந்த துணைவினை செயப்பாட்டு வினையாக அமைகிறது?

A) படு
B) உண்
C) பெறு
D) மேற்கண்ட அனைத்தும்

எ.கா:

- பாட்டு பாடப்பட்டது
- கோவலன் கொலையுண்டான்
- பணம் பெறப்பட்டது

- எச்சங்களுடன் சேர்ந்து "ஆயிற்று, போயிற்று, போனது" முதலான துணை வினைகள் செயப்பாட்டு வினைகளை உருவாக்குகின்றன.

எ.கா:

- வீடு கட்டியாயிற்று
- சட்டி உடைந்து பொயிற்று
- பணம் காணாமல் போனது

**97)** அப்துல் நேற்று வந்தான் என்பது எந்த தொடரைக் குறிக்கும்?

A) தன்வினைத் தொடர்
B) பிறவினைத் தொடர்
C) செய்வினைத் தொடர்
D) செயப்பாட்டுவினைத் தொடர்

**98)** பிறவினைத் தொடரைக் குறிக்கும் வாக்கியத்தைக் கண்டறிக.

A) மகிழன் நேற்று வந்தான்
B) கவிதா உரை படித்தாள்
C) குணாளன் நேற்று வருவித்தான்
D) உரை பாரதியால் படிக்கப்பட்டது.

**99)** "கவிதா உரை படித்தாள்" என்பது என்ன தொடர்?

A) உடன்பாட்டுவினைத் தொடர்
B) செய்வினைத் தொடர்
C) எதிர்மறைவினைத் தொடர்
D) செய்தித் தொடர்

- உரை கவிதாவால் படிக்கப்பட்டது - செயப்பாட்டு வினைத் தொடர்

**100)** பொருத்தமான தொடரைப் பொருத்துக.

(i) எவ்வளவு உயரமான மரம் - 1. கட்டளைத் தொடர்
(ii) உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? - 2. உணர்ச்சித்தொடர்
(iii) பூக்களைப் பறிக்காதீர் - 3. பெயர்ப்பயனிலைத் தொடர்
(iv) இது நாற்காலி - 4. வினாத் தொடர்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

- அவன் மாணவன் - பெயர்ப் பயனிலைத் தொடர்

**95)D 96)D 97)A 98)C 99)B 100)C**

ETW ACADEMY

**101)** பதம் என்றால் என்ன?

A) எழுத்து B) பொருள் C) சொல் D) யாப்பு

**102)** பதம் எத்தனை வகைப்படும்?

A) மூன்று B) நான்கு C) ஐந்து D) இரண்டு

- பகுபதம், பகாப்பதம்

**103)** பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் ............................... எனப்படும்.

A) பகுபதம் B) பகாப்பதம் C) A & B D) ஏதுமில்லை

**104)** பகுபதம் எத்தனை வகைபடும்?

A) 2 B) 3 C) 4 D) 5

**105)** பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்?

A) மூன்று B) ஆறு C) ஐந்து D) இரண்டு

- பகுதி (முதனிலை), விகுதி (இறுதினிலை), இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்

**106)** இது சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். அது எது?

A) பகுதி B) விகுதி C) இடைநிலை D) சந்தி

**107)** சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும் உறுப்பு எது?

A) பகுதி B) விகுதி C) இடைநிலை D) சந்தி

**108)** "இடைநிலை" உறுப்பு எவ்வாறு அமையும்?

A) சொல்லின் இறுதியில் அமையும்

B) சொல்லின் முதலில் வரும்

C) பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்

D) இடை நிலைக்கு இறுதியில் வரும்

**109)** பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு யாது?

A) சந்தி B) சாரியை C) விகாரம் D) பகுதி

**110)** பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் உறுப்பு என்ன?

A) சந்தி B) சாரியை C) விகாரம் D) பகுதி

**111)** விகாரம் விளக்கம் தருக.

A) பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்

B) பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்

C) தனி உறுப்பல்ல. பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்

D) சொல்லின் முதலில் வரும்

**101)C 102)D 103)A 104)A 105)B 106)A 107)B 108)C 109)A 110)B 111)C**

ETW ACADEMY

**112)** வரைந்தான் என்பதன் பகுதி யாது?

A) வரைதல் B) வரைந்து C) வரையான் D) வரை

**113)** விகுதி - பொருத்துக.

(i) முளைத்தல் - 1. தொழிற்பெயர் விகுதி

(ii) வளர்க - 2. வியங்கோள் வினைமுற்று விகுதி

(iii) வந்து - 3. வினையெச்ச விகுதி

(iv) அழகிய - 4. பெயரெச்ச விகுதி

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

- தல் - தொழிற்பெயர் விகுதி
- க, இய, இயர் - வியங்கோள் வினைமுற்று விகுதி
- உ,இ - வினையெச்ச விகுதி
- அ,உம் - பெயரெச்ச விகுதி

- ஆண்பால் வினைமுற்று விகுதி - அன், ஆன்
- பெண்பால் வினைமுற்று விகுதி - அள், ஆள்
- பலர்பால் வினைமுற்று விகுதி - அர், ஆர்
- ஒன்றன்பால் வினைமுற்று விகுதி - து, று

- என், ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- அம், ஆம், எம், ஏம், ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
- ஐ, ஆய், இ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
- இர், ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**114)** த், ட், ற், இன் முதலான சொற்கள் பெறும் இடை நிலை எது?

A) பெயர் இடைநிலைகள் B) எதிர்மறை இடைநிலை

C) எதிர்கால இடைநிலைகள் D) இறந்தகால இடைநிலை

- எ.கா: வென்றார் என்ற சொல்லில் "ற்" இறந்தகால இடைநிலை

**115)** கிறு, கின்று, ஆநின்று முதலான சொற்கள் பெறும் இடை நிலை எது?

A) பெயர் இடைநிலைகள் B) எதிர்மறை இடைநிலை

C) நிகழ்கால இடைநிலை D) இறந்தகால இடைநிலை

- எ.கா: உயர்கிறான் என்ற சொல்லில் "கிறு" நிகழ்கால இடைநிலை

**116)** எதிர்கால இடைநிலைகள் யாவை?

A) ப், வ், க் B) இல், அல், ஆ

C) ஞ், ந், வ், ச், த் D) த், ட், ற், இன்

**112)D 113)B 114)D 115)C 116)A**

ETW ACADEMY

எ.கா:

- புகுவான் என்ற சொல்லில் "வ்" எதிர்கால இடைநிலை
- செய்கேன் என்ற சொல்லில் "க்" எதிர்கால இடைநிலை

**117)** எதிர்மறை இடைநிலைகள் எவை?

A) ப், வ், க்  B) இல், அல், ஆ  C) ஞ், ந், வ், ச், த்  D) த், ட், ற், இன்

எ.கா: பறிக்காதீர் என்ற சொல்லில் "ஆ" எதிர்மறை இடைநிலை

**118)** ஞ், ந், வ், ச், த் முதலான சொற்கள் பெறும் இடை நிலை எது?

A) பெயர் இடைநிலைகள்  B) எதிர்மறை இடைநிலை

C) நிகழ்கால இடைநிலை  D) இறந்தகால இடைநிலை

எ.கா:

- மகிழ்ச்சி என்ற சொல்லில் "ச்" பெயர் இடைநிலை
- அறிஞன் என்ற சொல்லில் "ஞ்" பெயர் இடைநிலை

**சந்தி**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

**சாரியை**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**119)** பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து ______ ஆகும்.

A) சாரியை  B) எழுத்துப்பேறு  C) விகாரம்  D) இடைநிலை

- பெரும்பாலும் 'த்' மட்டுமே எழுத்துப்பேறாக வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு

எ.கா: வந்தனன் = வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்

வா - பகுதி ('வ' ஆனது விகாரம்)

த்(ந்) - சந்தி ('ந்' ஆனது விகாரம்)

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

<u>செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ</u>

செய் - பகுதி

ய் - சந்தி

ஆ - எதிர்மறை இடைநிலை

த் - எழுத்துப்பேறு

ஏ - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

**117)B  118)A  119)B**

கற்பவை கற்றபின்

**120)** தொடர்களை மாற்றி உருவாக்குக.

அ) பதவியை விட்டு நீக்கினான். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

Answer: பதவியை விட்டு நீக்குவித்தான்.

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

Answer: மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே. (இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக)

Answer: உண்ணும் தமிழ்த்தேனே.

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாக பகுத்துள்ளனர். (இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக)

Answer: திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

Answer: நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பிக்கப்பட்டான்

**121)** சொற்களைத் தொடர்களாக மாற்றுக :

அ) மொழிபெயர் (தன்வினை, பிறவினை தொடர்களாக மாற்றுக)

Answer:

மொழி பெயர்த்தாள் - தன்வினை

மொழி பெயர்ப்பித்தாள் - பிறவினை

ஆ) பதிவுசெய் (செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக)

Answer:

பதிவு செய்தான் - செய்வினை

பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டுவினை

இ) பயன்படுத்து (தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக)

Answer:

பயன்படுத்துவித்தான் - பிறவினை

பயன்படுத்தினான் - தன்வினை

ஈ) இயங்கு (செய்வினை, செயப்பாட்டு வினை தொடர்களாக மாற்றுக)

Answer:

இயங்கினாள் - செய்வினை

இயக்கப்பட்டாள் - செயப்பாட்டுவினை

ETW ACADEMY

**122)** பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ் ....................................... கொண்டுள்ளது.

ஆ) நாம் ....................................... வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் ....................................... கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் ....................................... நல்வழிப்படுத்துகின்றன.

Asnwer:

அ) தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.

ஆ) நாம் தமிழிலக்கிய நூல்களை வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் வாழ்வியல் அறிவைக் கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

**123)** பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் .......................... வணக்கம்.

ஆ) அவன் .......................... நண்பனாக இருக்கிறான்.

இ) .......................... ஓவியமாக வரைந்து வா.

ஈ) .......................... விலங்கிடம் பழகாதே.

Answer:

அ) எல்லோருக்கும் இனிய வணக்கம்.

ஆ) அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.

இ) பெரிய ஓவியமாக வரைந்து வா.

ஈ) கொடிய விலங்கிடம் பழகாதே.

**124)** பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி .......................... சென்றது.

ஆ) காலம் .......................... ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை .......................... காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் .......................... காட்டு.

Answer:

அ) ஊர்தி மெதுவாகச் சென்றது.

ஆ) காலம் வேகமாக ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

ETW ACADEMY

**125)** அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக எழுதுக)

Answer: நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது) இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?

ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக அமைக்க)

Answer: இசையோடு அமையும் பாடல்

இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக மாற்றுக)

Answer: நீ இதைச் செய்.

**126)** வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.

அ) தா (உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)

Answer:

தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்

தருவித்தேன் - பிறவினைத் தொடர்

ஆ) கேள் (வினாத்தொடர் ஆக்குக)

Answer: கேட்டாயா? - வினாத் தொடர்

இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)

Answer:

கண்ணன் கடிதத்தைக் கொடுத்தான் - செய்தித் தொடர்

ஏய் கொடு - கட்டளைத் தொடர்

ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)

Answer:

பார்த்தான் - செய்வினைத் தொடர்

பார்க்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்

பார்க்கச்செய்தான் - பிறவினைத் தொடர்

## புத்தகப் பின்பக்க வினாக்கள்

**127)** தமிழ் விடு தூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

A) தொடர்நிலைச் செய்யுள் B) புதுக்கவிதை

C) சிற்றிலக்கியம் D) தனிப்பாடல்

**128)** அ. ................இனம் ஆ. வண்ணம் ................ இ. ................குணம் ஈ. வனப்பு ................

A) மூன்று, நூறு, பத்து, எட்டு B) எட்டு, நூறு, பத்து, மூன்று

C) பத்து, நூறு, எட்டு, மூன்று D) நூறு, பத்து, எட்டு, மூன்று

**127) C 128) A**

ETW ACADEMY

**129)** "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே - எந்தக் / காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!"........... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்?

A) முரண், எதுகை, இரட்டைத் தொடை
B) இயைபு, அளபெடை, செந்தொடை
C) மோனை, எதுகை, இயைபு
D) மோனை, முரண், அந்தாதி

**130)** அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு தருக.

A) வேற்றுமைத்தொகை
B) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
C) பண்புத்தொகை
D) வினைத்தொகை

**131)** விறகுநான்; வண்டமிழே! உன்னருள் வாய்த்த பிறகுநான் வீணையாய்ப் போனேன் - என்ற வரிகள் யாருடையவை?

A) கண்ணதாசன்
B) மருதகாசி
C) வாலி
D) பட்டுக்கோட்டையார்

**மொழிபெயர்க்க.**

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - தத்துவவியலாளர்
4. Polyglot - பல்மொழி
5. Phonologist - ஒலியியலாளர்
6. Phonetics - ஒலிப்பியல்

**கலைச்சொற்கள்**

உருபன் - Morpheme

ஒலியன் - Phoneme

ஒப்பிலக்கணம் - Comparative Gramm

பேரகராதி - Lexicon

**சில நூல்கள்:**

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - ராபர்ட் கால்டுவெல்
- மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் - மணவை முஸ்தபா
- மாணவர்களுக்கான தமிழ் - என். சொக்கன்

ETW ACADEMY

**129)C 130)B 131)C**